# FUTURE READY வினாக்கள்
# திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

**Class:8** **Sub: English**

**Competency:** *Reads a variety of texts in English and identifies main ideas, characters, sequence of ideas and events and relates with his/her personal experiences*

**I Read this passage and answer the following questions.**

Living an eco-friendly life means caring for nature in every small action we take. When we reduce the use of plastic, save electricity, plant trees, and avoid wasting water, we are protecting our planet. Today, pollution and climate change have become serious problems because of human activities. Factories release smoke, vehicles use too much petrol, and people throw garbage into rivers and streets. This causes harm to ecosystems and human life. Students can play an important role in protecting nature. For example, they can carry cloth bags instead of plastic ones, switch off fans and lights when not in use, and keep their surroundings clean. Small actions by many people bring big changes. If everyone plants even one tree every year, the earth will become greener and healthier. Eco-friendly living is not only about protecting the earth but also about protecting our own future. Nature gives us fresh air, clean water, and food. If we take care of nature, it will take care of us in return. Therefore, eco-friendly habits must be practiced every day by children and adults alike.

**Q1.** What does 'living an eco-friendly' life mean?

a) Using plastic products in daily activities
b) Caring for nature through small actions
c) Travelling in vehicles for every short distance
d) Throwing waste materials into rivers and streets

**Q2.** What are the two serious problems mentioned in the passage?

a) Polluted surroundings and changes in climate
b) Clean air and safe drinking water
c) Forest trees and wild animals
d) Use of electricity and artificial lighting

33140701001

LIVEWORKSHEETS

**Q3.** Identify the verb in this sentence:

*"Students can play an important role in protecting nature."*

a) students

b) an

c) play

d) role

**Q4.** Choose the correct past tense form of the sentence:

*"People throw garbage into rivers and streets."*

a) People throw garbage into rivers and streets.

b) People throws garbage into rivers and streets.

c) People throwing garbage into rivers and streets.

d) People threw garbage into rivers and streets.

**Q5.** Fill in the blank with the correct preposition: *"We must avoid wasting water ----- everyday life."*

a) at

b) on

c) in

d) for

**Q6.** Mention two eco-friendly habits suggested for students.

**Q7.** What will happen if everyone plants one tree every year?

**II** **Fill in the blanks with suitable articles**.

A boy saw ___old man waiting to cross___ road. ____ boy voluntarily helped ___ old man to cross ____road.

33140701001
33140701001
33140701001
33140701001
LIVEWORKSHEETS

## FUTURE READY வினாக்கள்
## திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

**Class: 8** **Sub: Mathematics**

**Competency:** Explores and applies fractions (both as ratios and in decimal form) in daily-life situations

**Q1.** அன்பு ஒரு லிட்டர் ஆரஞ்சுப் பழச்சாறு தயாரிக்க 3 பங்கு ஆரஞ்சுச் சாறு மற்றும் 2 பங்கு தண்ணீர் பயன்படுத்தப்படுகிறார். அவர் இரண்டு லிட்டர்ஆரஞ்சுப் பழச்சாறு தயாரிக்க எவ்வளவு ஆரஞ்சுச் சாறு மற்றும் தண்ணீர் பயன்படுத்துவார்?

**Q2.** ஒரு மாணவர் ஒரு நாளில், 1/3 பகுதியைப் பள்ளியிலும் 3/8 பகுதியைத் தூங்குவதற்காகவும் செலவிடுகிறார் எனில், ஒரு நாளைக்குத் தூங்குவதற்கும் பள்ளிக்கும் சேர்த்து எத்தனை மணிநேரம் செலவிடுகிறார்?

**Q3.** இராதா தன் தந்தையிடமிருந்து தினசரி செலவுகளுக்காக ₹200ஐ பணமாகப் பெற்றாள். அவள் இம்மாதத்தில் 0.25 பகுதியைப் புத்தகங்களுக்கும் 3/10 பகுதியை இதர செலவுகளுக்கும் செலவிட்டாள் எனில், இந்த செலவுகளுக்குப் பிறகு அவளிடம் எவ்வளவு பணம் மீதமிருக்கும்?

**Q4.** ஒரு கிரிக்கெட் போட்டியில், ஒரு வீரர் 24 பந்துகளைச் சந்தித்தார். இவற்றில், 3/8 பந்துகளை அவர் நான்கு ரன்களாக(பவுண்டரிகளாக) அடித்தார். அவர் எத்தனை பந்துகளைப் பவுண்டரிகளாக அடித்திருப்பார்.

**Q5.** ஒரு குடும்பத்திற்கான தினசரி தண்ணீர் பயன்பாடு 240 லிட்டர். 5/12 பகுதி தண்ணீரைக் குடிப்பதற்கும் சமையலுக்கும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள் எனில், குடிப்பதற்கும் சமையலுக்கும் எத்தனை லிட்டர் தண்ணீரை அவர்கள் தினசரி பயன்படுத்துகிறார்கள்?

33140701001
33140701001
LIVEWORKSHEETS

# FUTURE READY வினாக்கள்
# திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

**Q6.** ஒரு 6 மணி நேரப் படிப்பின்போது, ஒரு மாணவர் 1/3 நேரத்தைக் கணிதத்திற்கும், 0.2 நேரத்தை அறிவியலுக்கும் மீதமுள்ள நேரத்தைப் பிற பாடங்களுக்கும் செலவிடுகிறார். அவர் கணிதம், அறிவியல் மற்றும் பிற பாடங்களுக்கு எவ்வளவு நேரம் செலவிடுகிறார்?

**Q7.** ஒரு மிதிவண்டி ஓட்டுபவர் 60 கிமீ தூரம்பயணம் செய்ய வேண்டும். அவர் காலையில் 2/5 தூரத்தையும் மதியம் 0.35 தூரத்தையும் கடக்கிறார். அவர் தனது பயணத்தை முடிக்க மேலும் எத்தனை கிலோமீட்டர் பயணிக்க வேண்டும்?

**Q8.** மனோ ஓர் அட்டைத்தாளின் 0.4 பகுதியை அடித்தளத்திற்கும், 1/5 பாகத்தை அலங்காரத்திற்கும், மீதமுள்ள பாகத்தைப் பக்கச் சுவர்களுக்கும் பயன்படுத்துகிறார். பக்கச் சுவர்களுக்கு அவர் பயன்படுத்திய அட்டைத்தாளின் பின்னம் மற்றும் தசமம் யாது?

**Q9.** ஒரு தொழிற்சாலை ஒவ்வொரு பெட்டியிலும் பதினைந்து அரை லிட்டர் எண்ணெய் பாக்கெட்டுகளை அடைக்கிறது. ஒரு பணியாளர் 90 லிட்டர் எண்ணெய்யைப் பயன்படுத்தி அதனைப் பாக்கெட்டுகளாக மாற்றுகிறார். அவர் எத்தனை எண்ணெய் பாக்கெட்டுகள் மற்றும் பெட்டிகளையும் உருவாக்கியிருப்பார்?

**Q10.** ஒரு வாடிக்கையாளர் ஒரு பொருளை வாங்க 3/20 தள்ளுபடி வழங்கும் கூப்பனைப் பயன்படுத்துகிறார். தள்ளுபடிக்கு முன் அப்பொருளின் விலை ₹1600 எனில், தள்ளுபடித் தொகை எவ்வளவு?

33140701001
33140701001
33140701001
33140701001
LIVEWORKSHEETS

# FUTURE READY வினாக்கள்
## திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

33140701001

**Class: 8** **Sub: Science**

**I.** பின்வரும் வினாக்களுக்கு விடையளி

**Competency:** Measures and Calculates

**Q1.** ஓர் உருளையின் உயரம் 14 மீ மற்றும் ஆரம் 4 மீ அதன் கன அளவைக் கண்டறிக. கனஅளவு ஓர் அடிப்படை அளவா அல்லது வழி அளவா? அதனை நிரூபிக்க.

**Competency:** Conducts simple investigations to seek answers to queries

**Q2.** தேங்காய் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெயைத் தண்ணீரில் கலக்கும்போது நீங்கள் உற்றுநோக்குவது யாது? அதற்கான காரணத்தைக் கூறுக. (தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் மற்றும் தண்ணீரின் அடர்த்தி முறையே 920 கிலோ/மீ$^3$, 800 கிலோ/மீ$^3$ மற்றும் 1000 கிலோ/மீ$^3$ ஆகும்).

**Q3.** வெவ்வேறு எடையுள்ள இருவர் அமர்ந்துள்ள ஓர் ஏற்ற இறக்க விளையாட்டைக் கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் அந்த சீசாவை எவ்வாறு சமநிலைப்படுத்த முடியும் என்பதை விளக்குக. ஈர்ப்பு மையம் என்ற கருத்து இங்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

**Competency:** Relates processes and phenomena with causes

**Q4.** கார்பனின் புறவேற்றுமை வடிவமான கிராஃபைட், மின்சாரத்தை நன்றாகக் கடத்துகிறது. அதே வேளையில், கார்பனின் மற்றொரு புறவேற்றுமை வடிவமான வைரம், மின்சாரத்தைக் கடத்தாது. இதற்கான காரணத்தைக் கூறுக.

**Q5.** செம்பருத்தி ஒரு முழுமையான மலர். இந்தக் கூற்றை நிரூபிக்க.

**Q6.** நெப்பந்தஸ் மற்றும் ட்ரோசிரா பூச்சிகளைப் பிடிக்கின்றன. எனவே அவை பூச்சி உண்ணும் தாவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை ஏன் பூச்சிகளை உண்கின்றன?

LIVEWORKSHEETS

## FUTURE READY வினாக்கள்
## திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

**Q7.** ஏடிஸ் எஜிப்டி என்ற கொசு கடிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சல் பரவுகிறது. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடல்நலத்தில் ஏற்படும் பாதிப்புகள் என்ன?

**Q8.** உடல் பருமன் என்பது தொற்றா நோய்களில் ஒன்றாகும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். வளரிளம் பருவத்தினரிடையே காணப்படும் உடல் பருமனுக்கான காரணங்களையும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாழ்க்கை முறை மாற்றங்களையும் கூறுக.

**Q9.** நரம்பு செல்லின் உடல், ஒரு நீளமான நரம்பு நாரால் கிளைத்துள்ளது. நரம்பு செல் அதன் செயல்பாட்டை மேற்கொள்வதற்கு இது எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும்?

**Q10.** வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியால் அவதிப்படும் ஒருவருக்கு கொதிக்க வைக்கப்பட்ட தண்ணீரில் சர்க்கரை மற்றும் உப்பு கலந்து கொடுக்கப்படுகிறது. இது ஏதேனும் ஆரோக்கியமான நடைமுறையுடன் தொடர்புடையதா? உங்கள் பதிலை நிரூபிக்க.

**Competency:** *explains processes and phenomena*

**Q11.** ஊர்வன மற்றும் இருவாழ்விகள் குளிர் இரத்தம் கொண்ட விலங்குகள் என்று ரம்யா திவ்யாவிடம் கூறியபோது, திவ்யா இந்த விலங்குகளின் இரத்தம் குளிர்ச்சியாக இருக்குமா என்று கேட்டாள். குளிர் இரத்தம் கொண்ட விலங்குகள் பற்றி திவ்யாவிற்குத் தெளிவாக விளக்குக.

**Q12.** பைனஸ், சைகஸ் ஆகியவை ஜிம்னோஸ்பெர்ம்களுக்கு எடுத்துக்காட்டுகள். அவற்றின் விதைகள் திறந்தவை. "திறந்த விதைகள்" என்ற வார்த்தையின் மூலம் நீங்கள் புரிந்து கொள்வது யாது?

**Competency:** *identifies materials and organisms on the basis of observable features*

**Q13.** கரப்பான் பூச்சி என்பது ஒரு பூச்சி. இது 3 ஜோடி இணைக் கால்களுடன் பிரிக்கப்பட்ட உடல் கண்டங்களைக் கொண்டுள்ளது. அதன் தொகுதியை அடையாளம் காண்க.

33140701001
33140701001
LIVEWORKSHEETS

## FUTURE READY வினாக்கள்
## திறன் அடிப்படையிலான மதிப்பீடு, அக்டோபர் – 2025

**Class – 9** **Sub: General Intelligence and General Knowledge**

1. பின்வரும் வரிசையின் அடுத்த மூன்று எண்களை எழுதுக.

   173, 155, 137, 119, 101 ------------ , ---------------- , --------------

2. பொருத்தமற்றது எது:?

   1. முக்கோணம் 2. சதுரம் 3. வட்டம் 4. செவ்வகம்

3. இந்தியாவின் தேசிய நதி -------------------------

4. பூமியின் மையத்தைக் கடக்கும் அட்சரேகை எது?

5. ஒரு காந்தத்திற்கு எத்தனை துருவங்கள் உள்ளன?

6. இந்தியாவின் தேசிய கீதத்தை ரவீந்திரநாத் தாகூர் எழுதினார். வேறொரு நாட்டின் தேசிய கீதமும் அவரால் எழுதப்பட்டுள்ளது. அந்நாடு எது?

7. நாம் ஏன் புவி தினத்தைக் கொண்டாடுகிறோம்?

8. எல்லாக் காடுகளும் நகரங்களுக்கு மாற்றப்பட்டால் என்ன நிகழும்?

9. சரி / தவறு

   **கூற்று:** எல்லாப் பறவைகளுக்கும் இறக்கைகள் உண்டு. பெங்குயின்கள் பறவைகள்.

   **தீர்வு:** பெங்குயின்களுக்கு இறக்கைகள் உண்டு.

10. ஒரு நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அங்கு என்ன நடக்க வாய்ப்பு உள்ளது?

33140701001

LIVEWORKSHEETS